# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்
# 2013 ஆகஸ்ட் மாதம் 19 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

## நிகழ்ச்சி நிரல்

I. **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

II. **அறிக்கைகளையும், ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

VI. **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

VII. **அமைச்சுக்களின் அறிவிப்புக்களும் / அமைச்சர்களின் தகவல்களும்**

VIII. **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

IX. **சபைக் கூட்டம்**

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு**

பிரேரணை :

" 2013.08.06 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுக் கூட்டத்தின் இணக்கத்தின் படி இன்றைய தினம் (2013.08.19) ஆந் திகதி கலைந்து சென்ற பின் இச் சபையானது 2013.09.03 ஆந் திகதி மு.ப.09.30 இற்கு கூட வேண்டியதுடன் 2013.08.20 ஆந் திகதி (செவ்வாய்க் கிழமை) சபைக் கூட்டம் நடைபெறாத தினம் ஒன்றாக கருதிச் செயற்பட வேண்டும். "

X. **சபை நடவடிக்கை**

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு**

பிரேரணை :

"இன்றைய தினம் பொது நடவடிக்கைகள் முன்னுரிமை பெற வேண்டும் "

XI. **தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்**

01. **கௌரவ சிறிகமல் பிலீஷியன் த சில்வா உறுப்பினர்**

*இலங்கையானது சுதந்திரக் கல்வி நடைமுறையில் உள்ள நாடொன்று என தெரிவிக்கப்படுகின்றது, எனினும் நாட்டினுள் மத்திய அரசு, மாகாண சபை, தனியார், சர்வதேச என பாடசாலைகள் இயங்குகின்றன என்பதை நாங்கள் அறிவோம் இவற்றுள் பெரும்பாலான பாடசாலைகள் மாகாண சபைகளுக்கே உரியதாகின்றன இம் மாகாண சபைகள் வருடாந்தம் வரவு செலவு திட்டத்தின் மூலம் அதிகளவு நிதி கௌரவ முதலமைச்சர் அங்கத்துவம் பெறும் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்படுகின்றது எனினும் எங்கள் மாகாண பாடசாலைகளின் பராமரிப்புக்காக வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை என அதிகாரியினால் தெரிவிக்கப்படுவதன் காரணமாக பெற்றோர்கள் பழைய மாணவர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் வேறு பல்வேறுபட்ட முறைகளின் மூலம் பாடசாலைகளின் குறைபாடுகள் தீர்க்கப்படுகின்றன என்பது வெளிப்படையாகும் ஒழுங்கற்ற முறையில் இடம்பெறும் இந்*

*நடவடிக்கையின் காரணமாக பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்படும் கஷ்டத்தை தவிர்ப்பதற்காக ஒழுங்கான முறை ஒன்றினை விரைவாக தயாரிக்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை எண்ணுகிறது.*

(பி/v (01)13/02)

02. **கௌரவ லலித் எல்லாவல உறுப்பினர்**

*"தற்போது காணப்படும் மாகாண சபை மற்றும் பாராளுமன்ற விகிதாசார தேர்தல் முறையானது, போட்டியிடும் அபேட்சகர்கள் அதே போல் வாக்காளர்களுக்கு மிகவும் கஷ்டமான தேர்தல் முறையொன்று ஆகிய படியால் எதிர்காலத்தில் நடைபெறும் எல்லா தேர்தல்களையும், புதிய உள்ளூராட்சி முறையின் மூலமும், மாகாண சபையை தொகுதி அடிப்படையிலும், பாராளுமன்ற தேர்தலை தொகுதி அடிப்படையிலும் நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது."* (பி/v (01)13/04)

## XII. பொது நடவடிக்கை

01. **கௌரவ பிரசன்ன ரணதுங்க - முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு (மே.மா) அமைச்சரினால் முன்வைக்கப்படுவதற்கு,**

## தகனம் செய்யும் இடம் தொடர்பான துணை விதிகள்
## (அத்தனகல்ல பிரதேச சபை)

"1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126(xiv) பிரிவுடன் சொல்லப்பட வேண்டிய அக் குறிப்பிட்டசட்டத்தின் 122 வது பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி, அத்தனகல்லைப் பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டுஅத்தனகல்ல பிரதேச சபையின் சபையின் - **"தகனம் செய்யும் இடம் தொடர்பான துணை விதிகள்"** என்ற பெயர் கொண்ட துணை விதிகள்,

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாட்டுச்) சட்டத்தின் 2ஆவது பிரிவுடன் சொல்லப்பட வேண்டிய 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 123(1) பிரிவின் கீழே மேல் மாகாணத்தின் முதலமைச்சர், நிதித் திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனித வலு அத்துடன் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மற்றும் மின் வலு வியாபார நடவடிக்கை அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு இணங்க அங்கீகரிக்கப்பட்டு,

அவ் அங்கீகாரம் தொடர்பான அறிவிப்பு 2012 டிசம்பர் மாதம் 11 ஆந் திகதி 1788/08 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதுடன்,

அத் துணை விதிகளுக்கு அங்கீகாரம் வழங்குமாறு பிரேரணை தெரிவித்து அத் துணை விதிகளை 1989 இன் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாட்டுச்) சட்டத்தின் 2வது பிரிவுடன் சொல்லப்பட வேண்டிய 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 125 ஆவது பிரிவின் கீழ் இந்த மேல் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்."

02. **கௌரவ பிரசன்ன ரணதுங்க - முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு (மே.மா) அமைச்சரினால் முன்வைக்கப்படுவதற்கு**

**<u>வாடகைக்கு அமர்த்தும் முச்சக்கர வண்டிகளை நிறுத்தல், ஒழுங்குபடுத்துதல், நிர்வகித்தல், மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணை விதிகள்</u>**
**(கடுவெல மாநகர சபை)**

"252 ஆவது அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267 பிரிவின் (1 ) உப பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 272 வது பிரிவின் 32 ஆவது உப பிரிவின் கீழ் கடு வெல பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்டு கடுவெல மாநகர சபையின் எல்லையினுள் - **"வாடகைக்கு அமர்த்தும் முச்சக்கர வண்டிகளை நிறுத்தல், ஒழுங்குபடுத்துதல், நிர்வகித்தல், மற்றும் கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணை விதிகள்"** என்ற பெயர் கொண்ட துணை விதிகள்,

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாட்டுச்) சட்டத்தின் 2ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழே மேல் மாகாணத்தின் முதலமைச்சர், நிதித் திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனித வலு, அத்துடன் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு, மின்சக்தி, மற்றும் மின் வலு, வியாபார நடவடிக்கை அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு இணங்க அங்கீகரிக்கப்பட்டு,

அவ் அங்கீகாரம் தொடர்பான அறிவிப்பு 2012 டிசம்பர் மாதம் 11ஆந் திகதி 1788/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதுடன்

அத் துணை விதிகளுக்கு அங்காரம் வழங்குமாறு பிரேரணை தெரிவித்து அத் துணை விதிகளை 1989 இன் 12ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாட்டுச்) சட்டத்தின் 2வது பிரிவுடன் வாசிக்க வேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் இந்த மேல் மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்."

**XIII. சபை ஒத்திவைப்பு பிரேரணை**

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2013.08.06 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, B அலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.